# ஆத்ம ஜோதி



சுவாமி அத்வயானந்த சரசுவதி



# ஆத்ம ஜோதி

[ஓர் ஆத்மீக மாத வெளியீடு]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.—சுத்தானந்தர்

ஜோதி 13 | சார்வரி ஹூ மாசிமீ 1-ந் உ (12-2-61) | சுடர் 4

## பொருளடக்கம்


1 எங்கள் குருநாதன் 97
2 சுவாமி அத்வயானந்த சரசுவதி 99
3 ஆனந்த சாகரம் 105
4 வாய் மொழி இலக்கியம் 113
5 சாந்தாவின் சமையல் 114
6 உபநிஷத் உண்மைகள் 121
7 பக்தித் தாயின் 64 அவயவங்கள் 124



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூ. 75-00 வருடச் சந்தா ரூ. 3-00

தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்:- க. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்:- நா. முத்தையா

"ஆத்ம ஜோதி நிலையம்" நாவலப்பிட்டி. [சிலோன்]


ஓம்

# எங்கள் குருநாதன்

— பரமஹம்சதாசன் —

அன்புவடி வாகவந்தான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
ஆனந்த வாழ்வுதந்தான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
துன்பமெல் லாம்துடைத்தான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்
தொல்லையெல் லாம்உடைத்தான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்!

நெஞ்சில் உணரவைத்தான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
நினைவில் குளிரவைத்தான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
அஞ்சொல் மலரவித்தான் எங்கள் குருநாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
அடியைத்தொழப்பணித்தான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்!

கல்லைக் கனியவைப்பான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
கனலைக் குளிரவைப்பான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
புல்லில் மணிசமைப்பான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
புவியில்விண் ணைப்படைப்பான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குருநாதன்!

கல்லாலின் கீழமர்வோன் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
கற்றோர் தொழப்படுவோன் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
சொல்லா துணர்த்திடுவோன் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
சொற்கள் கடந்துநிற்போன் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்!

எல்லாம் கடந்தவனும் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
எதிலும் கலந்தவனும் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
வல்ல பரம்பொருளாம் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
வாய்மை வடிவினனும் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்!

சுத்த சுதந்திரனும் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
தூய குணக்கடலாம் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
நித்ய நிரஞ்சனனும் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
நின்மல சின்மயனும் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்!

மோனக் கடல்குளிப்பான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
முத்துத் திரள்குவிப்பான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்
ஞானப் பரமஹம்ஸன் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
நல்லா ருடன்களிப்போன் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்!

உச்சிமலை மேலிருப்பான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
ஓங்கார யாழொலிப்பான் எங்கள்குரு நாதன், ஆம் எங்கள்குரு நாதன்,
இச்சைப் படுபவர்முன் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
இசையமு தம்கொழிப்பான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்!

அஞ்ஞானம் போக்கிடுவான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
அகந்தையை நீக்கிடுவான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
மெய்ஞ்ஞானம் தேக்கிடுவான் எங்கள்குரு நாதன், ஆம்,எங்கள்குரு நாதன்,
வீட்டின்பம் ஊட்டிடுவான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்!

அச்சம் தவிர்த்திடுவான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
ஆண்மை வளர்த்திடுவான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
சச்சிதா னந்தமயன் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்,
சந்ததமும் வாழ்ந்திடுவான், எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்!

கூற்றை யுதைத்தவனும் எங்கள்குரு நாதன் ஆம் எங்கள்குரு நாதன்,
கொஞ்சும் மலர்ப்பதத்தோன் எங்கள்குரு நாதன் ஆம் எங்கள்குரு நாதன்,
ஆற்றல் மிகப்படைத்தோன், எங்கள்குரு நாதன், ஆம் எங்கள்குரு நாதன்,
அன்பின் வலைப்படுவான் எங்கள்குரு நாதன், ஆம், எங்கள்குரு நாதன்!

## பக்தன்

உலகெலாம் ஆண்டவன் வடிவமாகக்கண்டு கொள்பவன் பக்தன்.
பிரதிபலனைக் கருதாமல் எல்லா உயிர்களிடத்தும் அன்பைச் சொரிபவன் பக்தன்.
ஆண்டவன் பால் எவ்விதத்திலும் அசைக்கமுடியாத நம்பிக்கையுடையவன் பக்தன்.

(சுவாமி அபேதானந்தா)



# சுவாமி அத்வயானந்த சரசுவதி

— ஆசிரியர் —

சாரங்கராஜன் எட்டு வயதுச் சிறுவன். வீட்டில் எப்பொருட்களும் அல்லது எம் மனிதரும் அவனைக் கவரவில்லை. ஏதோ ஒன்று உள்ளே இருந்து அழைக்கின்றது. வீட்டை விட்டுக் கிளம்பி விட்டான். சிறுவனின் சொந்த ஊர் தஞ்சாவூராகும். கோயிலூரிலுள்ள வேதாந்தமடத்தில் சென்றுதான் அவன் கால்கள் நின்றன. வேதாந்தமடச் சூழல் மனத்திற்குப் பிடித்திருந்தது. மனமும் சாந்தியடைந்தது. சிறுவயதிலேயே வேதாந்த விசாரஞ் செய்து பதினாறு வயதிற்குள் கற்கவேண்டிய சாஸ்திரங்கள் யாவும் கற்று விட்டான்.

மருதமுத்துப்பிள்ளை தஞ்சாவூரிலுள்ள ஒரு தமிழாசிரியர். வடிவழகியம்மையார் அவருடைய பிரியபத்தினியாவர். இருவருடையவும் தவப் பேற்றின் காரணமாகவே சாரங்கராஜன் பிறந்தான். எட்டு வயதுவரை சாரங்கராஜனுக்குத் தந்தையாகிய மருதமுத்துப்பிள்ளையே ஆசிரியராகவும் குருவாகவும் அமைந்தார். தன்னைப்போல ஒரு தமிழாசிரியனாகவாவது மகன் படித்துவிட வேண்டுமென்பது மருதமுத்துப்பிள்ளையின் பேரவாவாகும். வேதசாஸ்திரங்கள் யாவும் துறைபோகக் கற்றபின் பதினாறு வயதில் ஆசிரிய பயிற்சிப் பிரவேச பரீட்சை எடுத்து அதில் முதல் தரமாகச் சித்தியடைந்தார். இரு வருட ஆசிரிய பயிற்சியின் பின் மூன்று ஆண்டுகள் சாரங்கராஜன் ஆசிரியத் தொழிலில் அமர்ந்திருந்தார். தூய பிரம்மச்சரியத்தை அநுட்டித்து வந்தார். ஆத்மீகதாகம் எழுந்தது. குருநாதன் ஒருவரைத் தேடி யாத்திரை செய்யப் புறப்பட்டு விட்டார். யாத்திரையின்போது பலவிதமான மடங்களிலே தங்கும் வாய்ப்புக் கிடைத்தது.

அங்கெல்லாம் வேதாந்த பாடங்களை மற்றவர்களுக்குச் சொல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. மற்றவர்களுக்குப் பாடம் சொல்லுதல் மூலமாகவே வேதாந்த சாஸ்திரங்களை நுட்ப மாக அறியும் வாய்ப்பு ஏற்பட்டது.

இக்காலத்தில் சாரங்கராஜன் சண்முகானந்தா என்ற பெயரைப் பெற்றார். தகுந்த ஒருவரைச் சந்தித்தாலே தான் தன்னுடைய தாகம் தீரும் என்பதை உணர்ந்தார். வடநாட்டு யாத்திரையை மேற்கொண்டார். ரிஷிகேசத்தில் சுவாமி சிவானந்த சரசுவதி அவர்களுடைய தோற்றம் இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல இவரைக் கவர்ந்தது. அங்கு அமைதியாகப் பல ஆண்டுகள் கழிந்தன. அத்வை தானந்தா என்ற பெயருடன் ரிஷிகேசில் வாழ்ந்து வந்தார் கள். ரிஷிகேசத்திலும் வேதாந்த பாடம் சொல்லும் வாய்ப் புக் கிடைத்தது. 1930 இல் ரிஷிகேசத்தைச் சேர்ந்த சுவாமி கள் 1935 இல் மறுபடியும் தென்னாடு நோக்கி யாத்திரை செய்தார்கள். இம்முறை கதிர்காமம் சென்று வரவேண்டும் என்பதே முக்கிய குறிக்கோளாகும். பெரும்பாலும் கால் நடை யாத்திரையே மேற்கொண்டார்கள்.

தனுஷ்கோடியில் கப்பல் ஏறித் தலைமன்னார்க் கரையை வந்து சேர்ந்தார்கள். தலைமன்னாரிலிருந்து கதிர்காமத் திற்குக் கால்நடையாகவே புறப்பட்டார்கள். சுவாமிகள் கதிர்காமத்தை அடைகிறபோது ஆடித்திருவிழா நடை பெற்று முடிந்து ஆவணிமாதமாகி விட்டது. இக்காலத்தைப் போன்று அக்காலத்தில் போக்குவரவு வசதிகளோ, திரு விழா இல்லாத மற்றைய காலங்களில் ஜனநடமாட்டமோ கிடையாது. வழியில் பலவித சோதனைக் குள்ளானார்கள். கதிர்காமப் பெருமான் தமது அடியவனைப் பலவிதத்திலும் பரிசோதனைக் குள்ளாக்கித் தமது திருவிளையாடலையும் உணர்த்தினர். சுவாமிகள் கதிர்காமத்திலிருந்து தலைமன் னார் திரும்பும் வழியில் கண்டிமார்க்கமாக வந்தார்கள். கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பிரதான வீதி வழியாகத் தமது பிரயாணத்தை மேற்கொண்டார்கள். தனிவழியாகச் செல்லும் போது பலவித இன்னல்களுக்கு



ஆளாகவேண்டி வந்தது. இன்னல்கள் கூடக்கூட முருகன் மீது முறுகிய பக்தி வளர்ந்தது. கெக்கிராவை என்ற பட் டினத்திலிருந்து முப்பது மைல்களுக்கப்பால் வழித்துணை யாக ஒரு இஸ்லாமிய அன்பர் வந்து சேர்ந்தார்.

அந்த இஸ்லாமிய அன்பர் வந்து சேர்ந்த போதே சுவா மிகளுக்கு உள்ளத்தில் ஒரு அமைதி ஏற்பட்டது. இருவரும் பலவித சம்பாஷணைகளுக்கிடையில் வழிநடையை மேற் கொண்டார்கள். இஸ்லாமிய அன்பரும் தாம் கெக்கிராவை வரை கூட வருவதாகக் கூறி இருவரும் ஆத்ம விசாரத் தில் ஈடுபட்டனர். சுவாமிகளுக்கு விளங்காதிருந்த வேதாந்த சாஸ்திரக் கருத்துக்களை யெல்லாம் அந்த இஸ்லா மிய அன்பர் மிக இலகுவான முறையில் விளக்கம் செய்வ தைக் கேட்ட உடனே சுவாமிகளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் மிகமிகச் சாதாரணமானவராக, அதுவும் இஸ்லாமியராகக் காணப்படுகின்றாரே. இந்த உயர்ந்த தத்து வங்கள் எல்லாம் எப்படி இவருக்கு வாய்த்திருக்கும் என்ற சந்தேகம் சுவாமிகளுக்கு எழுந்தது. மந்திரத்தாற் கட்டுண்ட நாகம் போல இஸ்லாமிய அன்பருடைய வார்த்தைகளிலே கட்டுப்பட்டுச் சுவாமிகள் வழிநடக்கலானார்கள்.

சுவாமிகள் நேராகத் தலைமன்னாருக்குச் செல்ல இருந் தவர்கள். யாழ்ப்பாணம் சென்றே இந்தியா செல்ல வேண் டும் என்பது இஸ்லாமிய அன்பரின் அன்புக் கட் டளையாகும். சுவாமிகள் முதலில் அதற்கு இணங்கவில்லை. யாழ்ப்பாணத்திலும் நல்லூர், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம் போன்ற முருகன் திருத்தலங்கள் பல உள. அவற்றைத் தரிசித்துச் செல்லுதல் நல்லது என இஸ்லாமிய அன்பர் கூறுதலும் சுவாமிகளும் இசைந்தார்கள். இந்தக் கதைப் பராக்கிலே முப்பது மைல் தூரத்தை மூன்று மைல் போல நடந்து வந்து கெக்கிராவைப் பட்டினத்தை இருவரும் சேர்ந்தார்கள்.

அதோ பொன்னம்பலம் என்ற அன்பருடைய கடை தெரிகிறது. நீங்கள் அங்கு சென்றால் உங்களுக்கு ஆவன

எல்லாம் அவர் செய்வார் என்றுகூறி எதிரே இருந்த ஒரு இஸ்லாமிய அன்பருடைய கடைக்குள் தாம்புகுந்தார். சுவாமிகளைக் கண்ட பொன்னம்பலமோ பல நாட் பழகியவரைப்போல் முகமலர்ந்து உபசரித்துச் சாப்பாட்டுக்கு வேண்டிய ஆயத்தங்கள் யாவும் செய்தார். இதைக் கண்ணுற்ற சுவாமிகள் என்னுடன் ஒரு இஸ்லாமிய அன்பரும் வந்துள்ளார். அவருக்கும் வழி நடந்த களைப்பு. அவரையும் சாப்பிடச் செய்ய வேண்டும் என்றார்கள். உடனே பொன்னம்பலம், மிகவும் நல்லது, அவர் எங்கே என்று கேட்கச் சுவாமிகள் அதோ என்று எதிரே இருந்த இஸ்லாமிய அன்பருடைய கடையைச் சுட்டிக் காட்டினார்கள். பொன்னம்பலம் அங்கு சென்று விசாரிக்க அப்படி ஒருவரும் அங்கு வரவில்லை என்ற பதில் கிடைத்தது. மூன்று மணித்தியாலமாக அப்படி ஒருவரும் அங்கு வரவில்லை என்ற பதில் கிடைத்தது. அத் தகவலைக்கேட்ட சுவாமிகள் தாமே ஓடி வந்தார்கள். எல்லா இடமுந்தேடினார்கள். அத்தகைய ஒரு அன்பர் வரவில்லையென்றே எல்லோரும் கூறினார்கள். முருகன் திருவிளையாடலை நினைக்கச் சுவாமிகளுக்குக் கண்ணீர் துளிர்த்தது. சில தினங்கள் சுவாமிகள் கெக்கிராவையிலேயே தங்கியபின் ஒரு மோட்டாரில் பொன்னம்பலம் என்ற அன்பர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தார்கள். இணுவில் வடிவேற் சுவாமிகளுக்கு அறிமுகக் கடிதம் ஒன்றும் கொடுத்து அனுப்பி வைத்தார்கள்.

இணுவிலைச் சென்றடைந்த சுவாமிகள் வடிவேற் சுவாமிகளுடன் மூன்று வருட காலம் யாழ்ப்பாணத்தில் தங்கிப் பல திருத்தலங்களின் தரிசனையைப் பெற்றதோடு நுண்ணிய வேதாந்தக் கருத்துக்களையும் அறியும் வாய்ப்புக் கிடைத்தது. மறுபடியும் ரிஷிகேசம் சென்று, 1938-இல் சுவாமி சிவானந்த சரசுவதியவர்களிடம் சந்நியாசம் பெற்று அத்வயானந்த சரசுவதி என்ற நாமத்தைப் பெற்றார்கள். குருநாதருடைய கட்டளைப்படி தென்னாட்டில் ஆத்மீகத்தைப் பரப்புவதற்காக வந்தார்கள். திருச்சியிலிருந்து இருபத்தாறு மைல் தூரத்திலுள்ள திரு ஈங்கோய் மலையில் சிவானந்த



சாதனா நிலையம் என்ற பெயருடன் ஒரு தெய்வ நெறிக் கழகம் ஆரம்பித்தார்கள்.

ஈங்கோய்மலை சம்பந்தரால் பாடல் பெற்ற தலமாகும். நக்கீரரே ஈங்கோய் எழுபது என்ற பாடல் பாடியுள்ளார்.

*பரக்கும்பெருமை யிலங்கையென்னும் பதியிற் பொலிவாய*
*அரக்கர்க்கிறைவன் முடியுந்தோளும் மணியார் விரறன்னால்*
*நெருக்கியடர்த்து நிமலாபோற்றி யென்று நின்றேத்த*
*இரக்கம்புரிந்தா ருமையாளோடு மீங்கோய் மலையாரே.*

என்று சம்பந்தப் பெருமானாரால் புகழப்பெற்ற ஈங்கோய் மலையிலே எழுந்த சிவானந்த சாதனா நிலையத்தில் சாதனா வாரம் போன்ற பல சமய சாதனைகள் நடைபெற்றன. பல அன்பர்கள் இச்சாதனா நிலையத்தின் பயனாய் ஆத்மீக வாழ்வில் முன்னேறினர்.

பிரணவதீபம், அஷ்டாட்சரதீபம், பிரசோத்திரிபகவத்கீதை கீதாசாரத் தாலாட்டு உரை ஆகிய நூல்கள் சுவாமிகளின் படைப்புக்களாகும். தாய்மார்களுக்கும் குருகுலம் ஒன்று ஏற்படுத்த வேண்டுமெனப் பல அன்பர்கள் வேண்டிக்கொண்டார்கள். அவர்களுடைய வேண்டுகோளின்படி ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீ லலிதா மகில சமாஜம் என்ற பெயருடன் சிவானந்த சாதனா நிலையத்தின் ஒரு பகுதியில் ஆரம்பிக்கப் பெற்றது. அங்குச் சாதனை புரியும் கன்னியர்கள் யோகினிகள் என்ற பெயரால் அழைக்கப் பெறுவர். யோகினிகளுக்குத் தலைவியராக ஸ்ரீ மாதாஜி அமர்ந்துள்ளார்கள்.

கடந்த நான்காண்டுகளாக ஸ்ரீ லலிதா என்ற மாதப் பத்திரிகையைச் சுவாமிகள் நடத்தி வருகின்றார்கள். அதனை எழுத்துக் கோர்த்து, அச்சடித்து வெளியிடுதல் முதலாக எல்லாக் கருமங்களையும் யோகினிகளே செய்து வருகின்றார்கள். பஞ்சடித்தல், நூல் நூற்றல் போன்ற தொழில்களும் அங்கு நடைபெறுகின்றன. பெரும் பகுதிப் பொழுது தபசிலேயே கழிகின்றது. வேத சாஸ்திரங்களை முறையாகக் கற்று மந்திர

சித்தியும் பெற்று விளங்குகின்றனர். பூரணை தோறும் லலிதா சகஸ்ரநாம அர்ச்சனை நடைபெற்று வருகின்றது. கோயில் கும்பாபிஷேகம் முதலாக எல்லாவிதக் கிரியை முறைகளும் யோகினிகள் நடத்தி வைக்கின்றார்கள். ஆச்சிரமக் கருமங்கள் யாவற்றையும் தாங்களே திட்டம் ஒன்று வகுத்து நடத்தி வருகின்றார்கள்.

இத்தனைக்கும் மூலகாரணர் சுவாமிகளேயாகும். சுவாமிகள் கடந்த மூன்று மாதங்களாக அகில இலங்கையிலும் தமது ஆத்மீகக் கருத்துக்களை வாரி வழங்கினார்கள். அந்த ஞாபகார்த்தமாக இச்சுடரை வெளியிடுகின்றோம்.

---

## ஆத்மஜோதி அச்சக நன்கொடைகள்

| | ரூபா | சதம் |
|---|---|---|
| சென்ற மாதக் கணக்கு | 1757 - | 00 |
| திரு. மு. அ. பொன்னையா, கீரிமலை. | 27 - | 00 |
| திரு. K. சதாசிவம்பிள்ளை, புத்தளம். | 25 - | 00 |
| திரு. சி. இராமலிங்கம், கொழும்பு. | 10 - | 00 |
| திரு. ஞானனந்த சுவாமிகள், மிருசுவில். | 10 - | 00 |
| திரு. N.S. இராமச்சந்திரன், கெற்றிபோலா. | 5 - | 00 |
| திரு, க. சின்னத்தரை, சங்கத்தானை. | 2 - | 00 |
| திரு. சி. பொன்னுத்தம்பி, புன்னைக்குடா. | 2 - | 00 |
| திரு. வ. சின்னையா, கல்வயல். | 2 - | 00 |
| மொத்தம் | 1840 - | 00 |



# ஆனந்த சாகரம்

## (சுவாமி அத்வயானந்த சரசுவதி)

ஆனந்தக் கடல்; சிறிய கடல் அல்ல, பெரிய மகா சமுத்திரம்; வெறும் ஆனந்தமல்ல, அறிவு மயமான ஆனந்த மகா சமுத்திரம்; சிறிதேனும் அலையே இல்லாத மிகப் பெரிய ஆனந்த மகா சமுத்திரம்; தெவிட்டாத ஞான ஆனந்த மயமான அறிவுக் கடல் ஒன்றுள்ளது அது "நிஸ்தரங்க ஸஹஜானந்த அவபோதாம்புதி" என்று சொல்லப்படுகின்றது. நிஸ்தரங்கம் என்றால் அலைகளில்லாதது. ஸஹஜானந்தம் எனில் இயல்பாகவே உள்ள ஆனந்தம்; புதிது புதிதாக எப்போ தோ ஒவ்வொருகாலத்தில் உண்டாகி அழிந்து போகின்ற ஆனந்தமல்ல. என்றும், எப்போதும் உள்ள, வேறு எந்தச் சாதனத்தையும் வேண்டாத பேரின்பம். அவபோதாம்புதி என்றால் பேரறிவுப் பிழம்பான பெருங் கடல். இந்த ஆனந்த சாகரத்தை அடைந்து விட்டவர்கள் என்றும் அழிவதே இல்லை. வேறு ஒன்றையும் விரும்புவதும் இல்லை. அவர்களும் ஆனந்த சாகரமாகவே இருப்பார்கள். இந்தஆனந்த சாகரத்திலே நரை, திரை, மூப்பு, பிணி, துன்பம், கவலை, ஆசை, கோபம் ஆகிய தீமைகள் ஒன்றுமே இல்லை. சுழல்கள், நீரோட்டங்கள், கொடிய பிராணிகள் ஒன்றுமில்லை. முழுக முழுக ஆனந்தமே தவிர, மூச்சுத் திணறுதல் உண்டாகாது. இத்தகைய ஆனந்த சாகரம் யாது? அதுவே கடவுள்; பிரம்மம்; சச்சிதானந்த சக்தி. இந்த ஆனந்தசாகரத்தை நீங்கள் அடைய விரும்புகின்றீர்களா?

அந்த ஆனந்தக் கடலில், அநேக நதிகள் சென்று கலக்கின்றன. அந்த ஆறுகளில் ஏதாவதொரு ஆற்றில் இறங்கி, அந்த ஆற்று வெள்ளம் போகிற போக்கிலேயே நீந்திக்கொண்டு போனால் ஆனந்தக் கடலை அடைந்து விடலாம். அந்த நதிகளில் சில மிகவும் நீளமானவை. சில மிகவும் சிறியவை. சில கிளை நதிகளாக இருக்கின்றன. சில உப நதிகளாக

இருக்கின்றன. எந்த நதியில் இறங்கினாலும் அதன் வெள்ளம் தன்னிடம் இறங்கிய வரை ஆனந்தக்கடலில் கொண்டுபோய்ச் சேர்த்து விடும். ஒரு உபநதியில் இறங்கினால் அந்த உபநதி,பெரிய நதியில் கொண்டு போய்ச்சேர்க்கும். அந்தப் பெரிய நதி,ஏதாவது ஒரு கிளை நதியில் கொண்டு போய் விட்டு விடும். அந்தக் கிளைநதி, கடலில் கொண்டு சேர்த்து விடும். கிளைநதியும் உபநதிகளும் இல்லாமல் ஒன்றாகவே செல்லுகின்ற நதியும் உண்டு. எல்லா நதிகளும் நேராகவோ, வளைந்து வளைந்து சென்றே ஆனந்த சாகரத்தை அடைவனவே யாகும். ஆதலால் ஆனந்த சாகரமாகிய கடவுளை அடைந்து, என்றும் அழிவற்ற,தெவிட்டாத பேரின்பப்பேற்றை அடைய வேண்டுமானால், அதில் போய் சேரும் நதிகளில் ஏதாவதொன்றில் இறங்கி விட வேண்டியதுதான். இங்ஙனம் ஆனந்தக் கடலை அடையும் நதிகள் எவை என்று நினைக்கின்றீர்கள்? அவைதான் உலகத்திலுள்ள பல்வேறு வகையான சமயங்களாகும். எல்லாச்சமயங்களும், ஆனந்த மயமான கடவுளை அடையும் மார்க்கங்களே யாகும்.

சமயங்கள் என்றால் சைவசமயம், வைணவ சமயம், கௌமார சமயம், காணாதிபத்திய சமயம், சௌரசமயம், சாக்தேய சமயம், பௌத்த சமயம், கிறிஸ்துவ சமயம், முகம்மதிய சமயம், சமண சமயம், பாதஞ்சல சமயம்,சாங்கிய சமயம், மீமாம்சா சமயம், நியாய சமயம், உலோகாயத சமயம், முதலிய மதங்களையே குறிக்கின்றன. மதங்களுக்குச் சமயங்கள் என்று பெயர்வரக்காரணமென்ன? என்றால்,

சீவர்கள் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொருவித பிறவியை எடுக்கின்றார்கள். ஒரு சமயம் புல்லாகியும், ஒரு சமயம்பூடாகியும், ஒரு சமயம் புழுவாகியும்,இவ்வாறே மரமாகியும், மிருகங்களாகியும், பறவையாகியும், பாம்பாகியும், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், அசுரராய், முனிவராய், தேவராய் இங்ஙனம் தாவரம் சங்கமம் என்று சொல்லப்படுகின்ற எல்லாப் பிறவியாயும் பிறந்து பிறந்து இறந்து இறந்து வருகின்றார்கள். இப்படி பல விதமாகப் பிறக்கின்ற பிறவிகள் எல்லாவற்றினும், எப்போதோ ஒரு சமயத்தில் தான் மனிதராகப் பிறக்கின்றார்கள். அப்படி மனிதராகப் பிறந்த சமயத்தில் தான் இந்த சைவம் முதலிய சமயங்கள் பயன்படுகின்றன. மனிதராகப் பிறந்தவர்கள் எல்லோரும் எப்போதும் ஏதாவதொரு சமயத்தைப் பற்றி நடப்பார்கள் என்றுசொல்ல



இயலாது. மனிதர்களிலும் ஏதோ ஒரு சிலர்தான், ஏதோ ஒரு சமயத்தில்தான், ஏதோ ஒரு சமயத்தைப் பற்றி நடக்கின்றார்கள். அப்படி அவர்கள் பற்றி நடக்கின்ற சமயமும் கடவுளாகிய ஆனந்த சாகரத்தை அடையும் வரையிலும்தான் பயன்படுகின்றன. கடவுளை அடைந்த பிறகு சமயம் பயன்படுவதில்லை. இவ்வண்ணம் சீவர்கள் மனிதராகப் பிறந்த சமயத்தில், ஒரு குருவைப் பின்பற்றுகின்ற சமயம் முதல் ஆனந்த சாகரத்தை அடையும் வரை பயன்படுவதனாலேயே மதங்களுக்குச் சமயம் என்ற பெயர் ஏற்பட்டது. இந்த மனிதப் பிறவி தப்பினால் இனி எப் பிறவி வாய்க்குமோ, யாது வருமோ! எந்தச் சமயத்தில் பிறகு மனிதப் பிறவி வருமோ அறியோம். ஆதலால், கிடைத்தற்கரிய மானிடப் பிறவியை அடைந்துள்ள இந்தச் சென்மத்திலேயே, இந்தச் சமயத்திலேயே ஏதாவதொரு நல்ல சமயத்தைப் பற்றி, அதில் தீவிரமாகச் சென்று, ஆனந்தமாகிய கடவுளை, இந்தச் சென்மமுள்ள சமயத்திலேயே அடைந்துவிட முயலுகின்றவரே உண்மை மனிதராவார். மற்றவர் மனிதராகப் பிறந்திருந்தாலும் உண்மை மனிதராக மாட்டார்கள்.

இப்படிச் சமயங்களெல்லாம் ஆனந்த சாகரத்தை அடையும் ஆறுகளாக இருந்தாலும், அந்த ஆறுகளிலும் சாக்கிரதையாகவே நீந்திச் செல்லவேண்டும். ஏனென்றால் இந்தச் சமயங்களாகிய ஆறுகளில் ஆசை, காமம், கோபம், லோபம், மோகம், மதம், டம்பம், அகங்காரம் முதலிய முதலைகளும்,பெரிய மகா மீன்களும் இருக்கின்றன. இவைகளின் வாயில் அகப்படாமல் தப்பிச்செல்லவேண்டும். இந்தப் பிராணிகளிடமிருந்து தப்பிச் சென்றாலும் இவ்வாறுகளில் சமயச் சுழிகள் பல இருக்கின்றன. ஒவ்வொரு சமயத்திலும் பற்பல, சமயக்கணக்கர்கள் என்னும் சுழல்கள் உண்டு. அந்தச்சமயக் கணக்கர்களாகிய சுழிகளில் அகப்படாமல் தப்புவதே பெரும் பிரயாசையாகும். இங்ஙனம் முதலைகள் முதலிய தீய பிராணிகள் வாயில் சிக்காமலும், சமயக்கணக்கர்களாகிய சுழல்களில் அகப்படாமலும் ஏதாவதொரு சமயமாகிய ஆற்றில் செல்கின்றவர், ஆனந்த சாகரத்தினை இந்தச் சென்மத்தில் அடைந்தே தீருவேன் என்னும் தீவிர வைராக்கியத்தோடு ஒரே நோக்கமாகச் செல்வாரேயானால் அவர்

அந்தச் சென்மத்திலேயே பரமானந்த சாகரத்தை அடைந்து விடுவார் என்பது திண்ணம்.

சௌரம் என்னும் சமயமானது சூரியனைக் கடவுளாகக் கொண்டு வழிபடும் மார்க்கமாகும். இந்த சௌரசமயம் மூன்று கிளையாகப் பிரிந்து, ஒன்று சைவ சமயத்திலும், ஒரு கிளை ஆறு வைணவ சமயத்திலும், மற்றொரு கிளை ஆறு சாக்தேய சமயத்திலுமாகச் சென்று கலந்து விடுகின்றன. முதற் கிளையிற் செல்பவர் சூரியனைச் சிவசூரியன் என்றும், சூரியனே சங்கரன் என்றும் கூறுவார்கள். இரண்டாவது கிளையிற் செல்கின்றவர்கள், சூரியனைச் சூரியநாராயணன் என்று கூறுவார்கள். மூன்றாவது கிளையிற் செல்கின்றவர், சூரிய மண்டலத்தின் நடுவில் வீற்றிருப்பவர் தேவியே என்று கூறுவார்கள். இவர்கள் எல்லோரும் தம் தம் குருமார்கள் கூறிய வழிமுறையைப் பின் பற்றித் தவறாமல் தீவிரமாகச் சென்றால் இன்பவாரிதியை எய்துவார்கள் என்பது உறுதியேயாகும்.

காணாபத்தியம் என்பது கணபதியைக் கடவுளாகக் கொண்டு வழிபாடு செய்து ஒழுகி வரும் மார்க்கமாகும். கௌமாரம் என்னும் சமயமானது முருகனைக் கடவுளாகக் கொண்டு வழிபாடு செய்து ஒழுகிவரும் மார்க்கமாகும். சாக்தேயம் என்பது துர்க்கை முதலிய சக்தியைக் கடவுளாகக் கொண்டு வழிபாடு செய்து ஒழுகிவரும் சமயமாகும். காணாபத்தியம், கௌமாரம், சாக்தேயம் என்னும் மூன்று சமயங்களும் சைவசமயமாகிய ஒரு பேராற்றில் சென்று சேர்ந்து கடவுளை அடையக் கூடியனவாக இருக்கின்றன. அவ்வாறில்லாமல், சௌரம் சாக்தம், கௌமாரம், காணாபத்தியம் என்னும் நான்கு நதிகளும் சைவம் வைணவம் என்னும் பேராற்றில் கலக்காமலே செல்வதும் உண்டு.

இங்ஙனம் எல்லாச் சமயங்களும், சமணம், பௌத்தம், முகம்மதியம், கிறிஸ்துவம், சைவம், வைணவம், சாக்கியம், யோகம், மீமாம்சம், நியாயம், வைசேஷிகம் என்று சொல்லப்படுகின்ற எல்லா நதிகளும், வேதாந்தம் என்னும் எல்லாவற்றினும் பெரிய மாநதியில் கலந்த பிறகே உண்மையான பேரானந்தக் கடலில் நேராகச் சென்று சேர்கின்றன. அவ்வாறு



நேரே வேதாந்தம் என்னும் மாநதியில் கலக்காத சிற்றாறுகளாகிய சமயங்களெல்லாம் பல கால்வாய்களாகப் பிரிந்து வயல்களில் பாய்ந்து காய்ந்து பின் மேகமாகிப்பொழிந்து வேதாந்த மாநதியில் கலக்கும் ஆறுகளில் கலந்து சென்று எப்போதாவது ஓர் காலத்தில் ஆனந்த சாகரத்தை அடைகின்றன.

இதனாலேயே திருமூல நாயனார் சித்தாந்திகளாகிய சைவர்களைப் பார்த்துத் திருமந்திரத்தின் மூலம் கீழ்க் கண்டவாறு கூறுகின்றார்.

வேதமோ டாகமம்
  மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் சிறப்பும்
  பொதுவுமென் றுள்ளன
நாதன் உரையவை
  நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர்
  பெரியோர்க் கபேதமே.

வேதாந்தங் கண்டோர்
  பிரம்ம வித்தியாதரர்
நாதாந்தங் கண்டோர்
  நடுக்கற்ற யோகிகள்
வேதாந்த மில்லாத
  சித்தாந்தம் கண்டுளோர்
சாதாரண மன்ன
  சைவ ருபாயமே.

என்று கூறுகின்றார். எனவே, எல்லாச் சமயங்களும் வேதாந்த மென்னும் மாபெரும் ஆற்றினை அடைந்தே பின்னர் ஆனந்த சாகரத்தைச் சாருகின்றன என்று தெரிகின்றது. இதை உணர்ந்த வைணவர்கள் தங்கள் சமயமாகிய வைணவத்தை வேதாந்தம் என்று கூறுகின்றார்கள்.

முன் கூறிய காரணத்தால் மதங்களுக்குச் சமயங்கள் என்னும் பெயர் மிகவும் பொருத்தமாக இருப்பது போல, எல்லாச் சமயங்களையும் ஆறுகள் என்று கூறுவதும் மிகவும் பொருத்தமானதேயாகும். ஆறுகள் என்பதற்குக் கடலில் கலக்கும் நதிகள் என்னும் பொருள் உள்ளதோடு வழிகள், மார்க்கங்கள் என்னும் பொருளும் உண்டு அல்லவா? ஆகையால் எல்லாச் சமயங்களும் கடவுளை அடையும் மார்க்கங்களேயாகும்.

ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு வகையாக இருக்கும்போது அவையெல்லாம் எப்படி ஒரே கடவுளையே அடைகின்றன? என்று கேட்டால், கடவுள் பலராக இல்லாமல் ஒரே கடவுளாக இருப்பதால், எல்லாச் சமயமும் அந்தக் கடவுளைத் தானே வந்தடைய வேண்டும். மேலும், எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படையான உண்மைகள் ஒன்றேயாகும். இந்த அடிப்படை

இல்லாத சமயம் ஒரு சமயமாக உலகத்தில் நிலைத்திராது. அப்படியானால் எல்லாச் சமயமும் இந் நிலவுலகில் நிலைபெறுவதற்கு அடிப்படையானவைகள் எவை எனில் கூறுவோம்.

1. அகிம்சை 2. சத்தியம் 3. கள்ளாமை 4. பொறிபுலன்களை அடக்குதல் அதாவது காமமின்மை 5. பிறர் பொருள் கவராமை 6. தூய்மை 7. மகிழ்ச்சி 8. பொறுமை 9. கற்கவேண்டியன கற்றல் 10. சரணு கதியடைதல் 11. அன்பு 12. அறம் 13. மன அடக்கம் 14. பக்தி 15. ஞானம் என்னும் பதினைந்துமே ஆகும்.

இந்தப் பதினைந்தும் எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படையான உண்மை உயிர்நிலைகளாதலால், எல்லாச் சமய நூல்களும் இவற்றினை விளக்கிக் கூறுவனவே யாகும். ஒரு சமய வழியில் செல்பவன், அந்தச் சமய நூல்களை ஆராய்ந்து ஆராய்ந்து அதிலுள்ள இந்தப் பதினைந்து உண்மைகளையும் உணருவதோடு, மற்றச்சமய நூல்களையும் ஆராய்ந்தும், சமயக் குருமார்களிடம் கேட்டுணர்ந்தும், இவற்றின் உண்மையான விளக்கங்களை நன்ருக அறிந்து, கடைப்பிடித் தொழுக வேண்டும்.

இங்ஙனம் பல சமய நூல்களையும் பல மொழிகளின் மூலம் நன்ருக உணர்ந்து ஒழுகுபவனே ஒரு சமயத்தின் மூலம் சரிவரச் சென்று கடவுளை அடைவான். சமய அடிப்படைத் தத்துவத்தை நன்ருக உணர்ந்தவரே, தமது சமயச் சின்னங்களைச் சரியாகப் பயன் படுத்துவார்கள்; சமயத் தெய்வங்களின் நாமங்கள், உருவங்கள் ஆகியவற்றின் உண்மைகளை உணர்ந்து பயன் பெறுவார்கள்.

இங்ஙனம் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகவுள்ள அடிப்படைத் தத்துவங்களை முக்கியமாகக் கொள்ளாமல், ஒவ்வொரு சமயத்திற்கும் வெவ்வேருக இருக்கின்ற சமயச் சின்னங்கள், சமயத் தெய்வங்களின் நாமங்கள், உருவங்கள், தத்துவங்கள் ஆகியவற்றையே முக்கியமாகக் கருதி, பிற சமய நூல்களையும் மொழிகளையும் பயிலவே கூடாது என்று வற்புறுத்துகின்றவர்களையே நூல்கள் சமயக் கணக்கர் என்று கூறுகின்றன. இத்தகைய சமயக் கணக்கர்களாகிய குருமார்களின் வலைகளில் சிக்கி, அவர்கள் சொல்லுகின்ற முறைகளையேகைக்கொண்டு நடக்கும் சமயவாதிகள், ஒரு நாளும் பேரானந்த சமுத்திரமாகிய கடவுளைச் சார மாட்டார்கள். மாருக இவர்கள் மற்ற எல்லாச் சமயத்தினரோடும் மொழியினரோடும் பகைமை பூண்டு இவ்வுலகிலேயே பொருமை, கோபம், இம்சை ஆகியவைகளுக்கு உள்ளாகி துன்புற்று மரணமடைந்து தீய நரகிலும் அமிழுமாறுநேரும் ஆதலால், எல்லாச் சமயத்தவரையும், எல்லா மொழியினரையும் தமது உறவினராகவே கொண்டு பிற சமயங்களை இழித்துக் கூருமல் அவற்றிலுள்ள நன்மைகளை யெல்லாம் கைக்கொண்டு ஒரு நல்ல சமய நெறியிற் செல்ல வேண்டும். இவ்வாறு செல்லுகின்றவர்கள் ஆனந்த சாகரமாம் கடவுளை அடைவது உறுதியேயாகும். திரு மூலர் சொல்லும் திருமந்திரங்களைக் கவனியுங்கள்.

ஒன்றதே பேரூர்
வழியதற் காறுளது
என்றதே போலும்
இருமுச் சமயங்கள்
நன்றிது தீது
என்றுரை மாந்தர்கள்
குன்று குரைத்தெழு
நாயை ஒத்தாரே.

இதில் சமயக் கணக்கர்களை மலையைப் பார்த்துக் குரைக்கும் நாய்களுக்குச் சமானமாகக் கூறுகின்ருர்.

முதலொன்றும் ஆனை
முதுகுடன் வாலும்
திதமுறு கொம்பு
செவிதுதிக் கைகால்
மதியுடன் அந்தகர்
வகைவகை பார்த்தே
அதுகூற லொக்கும்
ஆறு சமயமே.

இதில் சமயக் கணக்கர்களைத் திருமூலர், யானை கண்ட குருடரை ஒத்தவர் என்று கூறுகின்ருர்.

கம்பராமாயணத்தில் கம்பர்;-

தோள் கண்டார் தோளே
கண்டார் தொடுகழற் கமல மன்ன
தாள் கண்டார் தாளே
கண்டார் தடக்கை கண் டாருமஃதே
வாள் கொண்ட கண்ணுர்
யாரே வடிவினை முடியக் கண்டார்
ஊழ் கண்ட சமயத்தன்
ஞன் உருவு கண்டாரை ஒத்தார்.

என்று மாறுபாடு கொண்ட சமயக் கணக்கர்கள் கடவுளை நன்ருகக் காண்பதில்லை எனக் கூறுகின்ருர்.

கல்லாடம் என்னும் நூலில், கல்லாடர் என்னும் பொய்யில் புலவர்:-

சமயக் கணக்கர்
மதிவழி கூறாது
உலகியல் கூறிப்
பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு
வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய
முக்கட் பெருமான்

என்று சமயக் கணக்கர் சொல்லும் நெறியைப் பின் பற்றாமல் நல்ல பக்தி நெறியில் செல்லுகின்றவர்களுக்கே பரமசிவன் அருள் புரிகின்றார் என்று பகருகின்றார்.

ஆதலால், எல்லோரும் இயன்றவரை அநேகமொழிகளையும் அநேக சமய நூல்களையும் துவேஷமில்லாமல் நன்றாகக் கற்றுணர்ந்து நன்முறையில் ஒரு சமய நெறியில் புகுந்து கடவுளாகிய ஆனந்த சாகரத்தை அடைதல் வேண்டும்.

பல்வேறு சமயங்களில் செல்லும் பல்வேறு விதமான பண்புடைய மக்களெல்லாம் எவ்வாறு ஒரே ஆனந்ச சாகரத்தை எய்துவர் என்றால்,

உலகத்திலுள்ள எல்லா நதிகளும் ஒரு சமுத்திரத்தினின்றே உண்டாகின்றன. ஆதலால் ஒரு சமுத்திரத்தையே மீண்டும் அடைகின்றன. கடல்நீர்தானே மேகமாகச் சென்று, மழையைப் பொழிந்து; ஆறுகளாகஓடி மீண்டும் கடலை அடைகிறது! அதுபோல

எல்லாச் சமயவாதிகளாகிய எல்லா மக்களும் ஆனந்த சாகரகமாகிய ஒரே கடவுளினின்றும் தோன்றியவர்களேயாவர். ஆதலால், அவர்கள் எல்லோரும் அந்த ஒரு கடவுளையே மீண்டும் அடைவார்கள். இது பற்றியே கடவுளை அடைவிக்கும் சமயத்திற்கு லத்தீன் மொழியில்'ரிலீஜன்' Religion என்று பெயர் சொல்லப் படுகிறது. Re ரீ - என்றால் மீண்டும் Ligion - என்றால் கட்டுவது என்று பொருள். இங்ஙனமே மேல் நாட்டினரின் வேதமும் விளம்புகின்றது என்றால், அநாதியாகிய நமது வேதத்தில் வேறு கூறப்பட்டு இருக்குமோ இராது. ஆதலால், அவற்றினை விரித்துக் கூறி பொழுதைப் போக்காமல், எல்லோரும் ஆனந்த சாகரமாகிய கடவுளை அன்பு நெறியின் மூலம் அடையுமாறு கேட்டுக் கொண்டு இக்கட்டுரையை முற்றுவிக்கின்றேன்.

வாழ்க ஆனந்த சாகரம்!



# வாய் மொழி இலக்கியம்

[ நாட்டுப்பாடல்கள் ]

யாழ்ப்பாணப் பிரதேசக் கலைமன்றம்.
நாட்டுப்பாடல் நடன நாடகக்குழு வெளியீடு.

கிராம மக்களுடைய வாழ்வின் சுபீட்சத்திலேதான் உலகம் தங்கியுள்ளது. அதேபோல கிராமியக்கவிதைகளிலே தான் இலக்கிய உயிர் இருக்கிறது என்றால், மிகைப்படுத்திக் கூறுவதொன்றல்ல. கிராமியமக்களின் பண்பாடு, கலாச்சாரம் ஆதியனவற்றைப் படம் பிடித்துக் காட்டுவன வாய் மொழி இலக்கியமாக வந்த அவர்களுடைய கவிதைகள். அகப்பொருள் இலக்கியங்களை நெட்டுருப்பண்ணிவிட்டு நகரத்திலே வாழ்வு நடத்தும் இலக்கியரசிகர்கள் கிராமிய மக்களுக்கு அகத்துறை இலக்கியம் பூச்சியம் என்றே அபிப்பிராயம் கொண்டுள்ளனர். வாழ்வும் இலக்கியமும் ஒன்றாகக் காண்பவர்கள் கிராமியமக்கள். அவர்களுடைய உள்ளத்திலெழுந்த உணர்ச்சிகளே நாட்டுப்பாடல்கள். அவற்றைப்படிப்பதற்கும், படித்து உணர்வதற்கும் அகராதியைப் புரட்டத் தேவையில்லை, உரையாசிரியர்களைத் தேடிப்போகத் தேவையில்லை, இத்தகைய பாடல்கள் அவ்வக்கிராமத்திலே மாத்திரம் வாழ்ந்து வந்தன. சினிமாப்படங்களும் சினிமாப்பாடல்களும் கத்தரிக்காய்க் கதைகளும் கிராமத்தை நோக்கிப்படையெடுத்தன. இப்படையெடுப்பினாலேபாட்டிக்கதைகளும்கிராமியக்கவிதைகளும் சிறிது பின்னடைந்தன. அடுத்த தலைமுறையில் இவையிருந்தனவோ என்றெண்ணக்கூடிய அளவுக்கு வாழ்க்கை மாறிவிட்டது. இத்தருணத்திலே வாய் மொழி இலக்கியமாகிய நாட்டுப் பாடல்களைத் தொகுத்து, அச்சுவாகனமேற்றி நிரந்தரச் செல்வமாக்கி வைத்த பெருமை யாழ்ப்பாணப்பிரதேசக் கலைமன்றத்தார்க்குரியதாகும். அவர்கள் தமிழ்ப்பணி வாழ்க!

விலை ரூபா ஒன்று மாத்திரமே.

* * * *

# சாந்தாவின் சமையல்

(ஸ்ரீ லலிதா)

ஆச்சரியமாயிருக்கிறது அம்மா! என்னுடைய அக்காளுக்கு ஒருநாள் வயிற்று வலி உண்டானது. காரணம் தெரியவில்லை. கைப் பக்குவமாக எத்தனையோ வைத்தியங்கள் செய்தோம். தீரவில்லை. இரண்டு நாள் பார்த்தோம். மூன்றாவது நாள் இந்த ஊரிலுள்ள டாக்டரை அழைத்துக் கொண்டுவந்து காண்பித்தோம். அவர் பரீட்சைகள் செய்து பார்த்துவிட்டு இரண்டு நாள் உள்ளுக்கு மருந்து கொடுத்துச் சாப்பிடச் செய்தார். அப்போதும் வலி நிற்கவில்லை. பிறகு அவர் யோசித்து "இப்பொழுது ஒரு இஞ்செக்ஷன் செய்கின்றேன்; ஒரே ஊசியிலேயே வலி விட்டுப்போகும் பாருங்கள்" என்று சொல்லி ஒரு ஊசி போட்டுவிட்டு இருபத்தைந்து ரூபாயில் போட்டுப் பணம் வாங்கிக் கொண்டு போய்விட்டார். வலி நிற்கவில்லை. மறுபடியும் அழைத்து வந்து இன்னும் இரண்டு நாள் அதே ஊசியைப் போடச் செய்தோம். வலி நின்றபாடில்லை. என்னுடைய அக்காள் துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தாள். அதனைப் பார்த்து நான் எங்களுடைய அம்மா என் தங்கை எல்லோரும் அழுது விட்டோம். எங்கள் அப்பா ஒரு மூலையில் விசனமாக உட்கார்ந்து கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் எங்கள் வீட்டிற்கு ஒரு பெரியவர் வந்தார். அவர் எங்களைப் பார்த்து, 'ஏன் இப்படி அழுது கொண்டும் கவலைப் பட்டுக் கொண்டும் இருக்கின்றீர்கள்? உங்களுக்கு என்ன துன்பம் வந்தது? சொல்லுங்கள்' என்று கேட்டார். என்னுடைய மூத்த மகளுக்கு எப்படியோ தாங்கவே முடியாத வயிற்று வலி வந்திருக்கின்றது. ஏழு நாளைக்குமேல் ஆகிவிட்டது. எவ்வளவோ வைத்தியம் செய்து பார்த்தோம். தீரவில்லை. அவள் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறாள். பார்க்கச்சகிக்கவில்லை. என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றவில்லையென்று எங்கள் அப்பா அவரிடம் கூறினார். பெரியவர் 'இதைக் கேள்விப்பட்டுத்தான் அதனைத் தீர்ப்பதற்காக நான் வந்தேன். கவலைப்படாதீர்கள்' ஒரு சிறிய தாம்பாளத் தட்டில் கொஞ்சம் விபூதி போட்டுக் கொண்டு வாருங்கள்' என்று சொன்னார். நாங்கள் அப்படியே கொண்டுவந்து கொடுத்தோம். பெரியவர் அதை வாங்கித் தாம்பாளத்தில் அந்த விபூதியை வட்டமாகப் பரப்பி அதில் ஏதோ எழுதி எதிரில் வைத்துக் கொண்டு அரைமணி நேரம் வரை வாயில் முணுமுணுத்துக் கொண்டு இருந்து விட்டு அந்த விபூதியை எடுத்துக் கொடுத்து அதை வாயிலும் தலையிலும் சிறிது சிறிது போட்டு நெற்றியில் பூசி, வயிற்றில் வலிக்கும் இடத்தில் நன்றாகத் தடவி விடுங்கள்' என்று சொன்னார்' எங்கள் அம்மா அந்த விபூதியை வாங்கி அக்காளுக்கு அவர் சொன்னபடியே செய்தார்கள். சற்று நேரத்தில் வலி முழுவதும் நின்று விட்டது. எனது அக்காள் சந்தோஷத்தோடு துள்ளியெழுந்து வந்து எங்களிடம் எல்லாம் சொன்னார்கள். எங்களுக்கு ஆச்சரியமாய் இருந்தது. எல்லோரும் மகிழ்ச்சியடைந்து அந்தப் பெரியோர் பாதத்தில் வீழ்ந்து வணங்கி அவரை எங்கள் வீட்டிலேயே இரண்டு மூன்றுநாள் தங்கிவிட்டுப் போகும்படி கேட்டுக் கொண்டோம். அவரும் அப்படியே இருந்தார். அவர் அப்பொழுது காசியாத்திரையின் பொருட்டு மதுரையிலிருந்து வந்து கொண்டிருப்பதாகச் சொன்னார். அவர் போகும்பொழுது நாங்கள் நமஸ்காரம் செய்து வழிச் செலவிற்குப் பணம் கொடுத்தனுப்பினோம். அந்தப்பெரியவர் எங்கள் வீட்டை விட்டுச் சென்று ஒரு மாதத்திற்கு மேலாகி விட்டது.

பத்து நாட்களுக்கு முன்பு அந்தப் பெரியோரைப் பற்றி எங்கள் வீட்டில் எல்லோரும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது எங்களுக்குத் தெரிந்த ஒரு அம்மாள் வந்தார்கள் நாங்கள் பேசுவதைக் கேட்டு இதென்ன ஆச்சரியம்! பத்து நாளைக்கு முன் யோகினி அம்மையார் ஒருவர் நமது ஊர் திரிபுரசுந்தரிஅம்மன்கோவிலில் வந்து தங்கியிருக்கின்றார்கள். இந்தவூரில் இருபத்தைந்து

வயதான பெண் ஒருத்தி
இழுப்பு வாதம் உடையவ
ளாக இருந்தாள். அவளு
டைய பெற்றோர் எவ்வள
வோ செலவு செய்து வைத்
தியம் பார்த்துக் கை விட்
டார்கள். அவள் ஊரில் சுற்
றிக் கொண்டு எச்சில் இலை
களில் இருக்கும் சாதங்க
ளைச் சாப்பிட்டு விட்டுத்
தெருக்களில் திரிந்து கொண்
டிருந்தாள். அவளுடைய
கால் கைகள் எப்பொழுதும்
வெட்டி வெட்டி இழுத்துக்
கொண்டே இருக்கும். அந்
தப் பெண் கோவிலில் இரு
ந்த யோகினி அம்மையா
ரைக் கண்டு காலில் விழுந்து
அழுது வாயினால் சொல்ல
முடியாமல் குழறிக் குழறித்
தனக்குண்டான கஷ்டத்
தைச் சொன்னாள். யோகினி
யார் அவள் மீது இரக்கப்
பட்டு அவளைத் தடவிக்
கொடுத்து அழாதே அம்மா
உடம்பு இனிமேல் சௌக்கி
யமாகிவிடும் என்று கூறி
னார். உடனே அந்தப் பெண்
ணின் வலிப்புநோய் நீங்கி
ஆரோக்கிய முடையவளா
னாள். நேற்றுத்தான் இது
நடந்தது. அந்தப் பெண்
ணும் யோகினி அம்மையா
ருக்குத் தொண்டு செய்து
கொண்டு அவருடன் கூட
வேதான் இருக்கிறாள். வேண்
டுமானால் போய்ப் பார்க்க
லாம் என்று சொல்லிச்
சென்று விட்டார்கள்.

அன்று முதல் ஒவ்வொ
ரு நாளும் தங்களைப் பார்க்க
வேண்டுமென்றும் சில சந்
தேகங்களைக் கேட்க வேண்
டுமென்றும் ஆவலுடையவ
ளாயிருந்தேன். இன்றுதான்
வர முடிந்தது. மகா யோகி
னியாராகிய தங்களைப் பார்
த்த பொழுதே மிகவும் மகி
ழ்ச்சியும் தங்களிடத்தன்பும்
உண்டாயது, என்னுடைய
பெயர் சாந்தா. எனக்கு
இப்பொழுது வயது பதி
னெட்டாகின்றது. நான்
இப்பொழுது பீ. ஏ. வகுப்
பில் படித்துக் கொண்டிருக்
கிறேன். நான் யாராவது
ஒரு ஞான குருவை அடைய
வேண்டுமென எண்ணிக்
கொண்டிருந்தேன். நல்ல
சமயத்தில் தாங்கள் எனக்
குக் கிடைத்து விட்டீர்கள்.
நான் தங்களுக்குச் சிஷ்யை.
என்னுடைய ஐயங்களையெ
ல்லாம் தாங்கள் அகற்ற
வேண்டும் என்று சொல்லி
அழகும், அறிவும், அன்பும்,
பண்பும் மிகுந்த சாந்தா
யோகினியாரின் பாதங்க
ளில் வீழ்ந்து வணங்கினாள்.

யோகினியார் அந்தப்
பெண்ணைப் பார்த்து அரு
கில் உட்கார வைத்து
சாந்தா! நீ நல்ல பெண்ணாக
இருக்கின்றாய். உன்னிடத்
தில் எனக்கு மிகவும் பிரியம்
உண்டாகின்றது. உனக்கு
இருக்கும் சந்தேகங்களை
எல்லாம் என்னிடம் கேள்.
சூரியனைக்கண்ட இருளைப்
போல உன் ஐயங்களையெல்
லாம் நான் அகற்றி விடுகி
றேன் என்று கூறினார்.

**சாந்தா:-** தாயே! சிறந்த
மருந்துகள் கொடுத்து,
பெரிய டாக்டர்களால்
போக்க முடியாத வியாதி
கள் சாணத்தைச் சுட்டுச்
சாம்பலாக்கிய விபூதியினால்
எவ்வாறு போய் விடுகின்
றன? அதை விடப் பெரிய
வியாதிகள் தங்களைப்
போன்ற பெரியோர்கள்
தொட்ட மாத்திரத்தில் எவ்
வாறு போய்விடுகின்றன?
இதன் இரகசியத்தை எனக்
குச் சொல்லியருள வேண்
டும்.

**யோகினியார்:-** சாந்தா!
முக்கியமான விடயத்தைப்
பற்றிக் கேள்வி கேட்டாய்.
நீ மிகவும் புத்திசாலி. கவ
னமாகக் கேள்.

இந்த உலகம் முழுவதி
லும் நடக்கும் காரியங்கள்
எல்லாம் நமக்குத் தெரி
யாத ஒரு பெரிய மகா பரா
சக்தியாலேயே நடைபெறு
கின்றன. அந்தச் சக்தியே
எல்லாவற்றையும் உண்டு
பண்ணுகின்றது. காப்பாற்
றுகிறது. அழிக்கின்றது.
அந்தச்சக்தியாலேயே நோய்
கள் உண்டாகின்றன. நீங்கி
விடுகின்றன. நாம் செய்த
பாவ புண்ணியங்களுக்குத்
தகுந்தாற் போலவே நமக்கு
நோய்களையும், ஆரோக்கி
யத்தையும் கொடுக்கின்றது.
அந்த மகா பராசக்தியையே
பெரியோர்கள் கடவுள் என்
றும், லலிதா என்
றும் கூறுவார்கள். அந்தக்
கடவுளே எல்லோரினும்
பெரிய டாக்டராவார். அவ
ரைவிடச் சிறந்த வைத்தி
யர் ஒருவருமில்லை. அவரால்
நீக்க இயலாத வியாதி ஒன்
றுமில்லை. அறிவு நிறைந்த
பெரியோர்கள் அந்த லலிதா
வைக் கொண்டே பிறவி
நோயைக் கூட நீக்கிக்கொள்
கிறார்கள்.

**சாந்தா:-** எனது குருரூ
பிணியாக வந்த தேவியே!
கடவுளாகிய அந்த லலிதா
சக்தியைக் கொண்டு நாம்
எவ்வாறுவியாதிகளைப்போக்
கிக் கொள்ள முடியும்? அம்
முறையை எனக்குக் கூறிய
ருளுங்கள்.

**யோகினியார்:.** அன்பு
மிக்க குழந்தாய்! கடவுளுக்
குக் கணக்கில்லாத அநேக
பெயர்கள் உள்ளன. அவற்
றுள் பல பெயர்கள் மிகுந்த
சக்தி வாய்ந்தன. அவைக
ளுக்கு மந்திரங்கள் என்று
பெயர். மந்திரங்களைப் பக்
தியோடு லட்சக் கணக்கான

தடவை திருப்பித் திருப்பிச் சொல்வதற்கு ஜெபம் செய்தல் என்று பெயர். ஜெபம் செய்வதால் நம்மிடத்தில் அதிகமான தெய்வீக சக்தி உண்டாகின்றது. விபூதியை ஒரு தாம்பாளத் தட்டில் எடுத்து அதில் மந்திரத்தை எழுதி அந்த மந்திரத்தைச் செபித்தால் அவ்விபூதியில் தெய்வீக சக்தி உண்டாகின்றது. அந்த விபூதியை நோயுள்ள இடத்தில்தடவி உள்ளுக்கும் சிறிய அளவில் சாப்பிட்டால் நோய்கள் நீங்கி விடும். இப்படித்தான் ஒரு பெரியவர் உனது தமக்கையின் தீராத வயிற்று வலியைத் தீர்த்து வைத்தார்.

நாம் நடக்கும்போதும், படுத்திருக்கும் போதும், உட்கார்ந்திருக்கும்போதும், வேலைகள் செய்யும்போதும் வேறு நினைவு இல்லாமல் அன்போடு மந்திரத்தைச் செபித்து வரவேண்டும். உணவுகளை மந்திரத்தோடு சமைத்து மந்திரம் சொல்லிச் சாப்பிட வேண்டும். இவ்வாறு இடைவிடாமல் எப்போதும் மந்திரத்தை அன்போடு வெகுநாள் ஜெபித்து வந்தால் நம்முடைய உடல்முழுவதும் தெய்வீக சக்தி நிறைந்து ததும்பும். இத்தகைய தெய்வீக சக்தி நிறைந்தவர்கள் நோயாளிகளைத் தொட்டால் அவர்களுடையநோய்கள் அகன்றுவிடும். இதற்கு நோயுடையவர்களும் பக்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

சாந்தா:, யோகினித் தெய்வமே! தங்களுடைய உடம்பு முழுவதும் மிகுந்த தெய்வீக சக்தி நிறைந்திருக்கின்றது. அதனாலேயே நீங்கள் தொட்ட மாத்திரத்தில் இந்தப் பெண்ணினுடைய வலிப்பு நோய் முழுவதும் நீங்கிவிட்டது. நீங்கள் ஒருவரை அன்போடு பார்த்தால் உங்கள் பார்வை பட்ட மாத்திரத்தில் அவருடைய பாபங்கள் எல்லாம் நீங்கிப் போய்விடும். உங்களுக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்கும் இந்தப் பெண் மிகவும் பாக்கியவதி. அதனால்தான் இந்தப் பெண் உங்களைக் கண்ட மாத்திரத்தில் அன்பு கொண்டு உங்களைவணங்கித் தன்னுடைய நோயை நீக்கிக் கொண்டு பின்னும் தங்களுக்குத் தொண்டு செய்துகொண்டே இருக்கின்றாள். தாங்கள் மந்திரத்தோடு சமைக்க வேண்டும் என்று கூறினீர்களே; சமையலுக்கும் மந்திரம் இருந்தால் அதனை எனக்குச் சொல்லுங்கள். நானும் மந்திரத்தோடு சமையல்செய்து எங்கள் வீட்டிலுள்ளவர்களையெல்லாம் தெய்வீகசக்தி உடையவர்களாகச் செய்து விடுகின்றேன்.

**யோகினியார்:-** நங்காய்! நீயும் ஒரு தெய்வீகக் குழந்தையாகவே இருக்கின்றாய். அதனால்தான் உனக்குத் தெய்வபக்தி செய்ய வேண்டும் என்று ஆசை உண்டாகிறது. சமையல் மந்திரம் இன்று சொல்லிக் கொடுக்கின்றேன். அதன்படியே சமையல் செய். உன்னுடைய தாயார், தங்கைகளுக்கும் இதைச் சொல்லிக் கொடுத்து அவர்களையும் அப்படியே சமையல் செய்யும்படி சொல். பிறகு உனக்கு வேண்டியவைகளையெல்லாம் சொல்லிக் கொடுக்கின்றேன்.

சமையலுக்காக உலை வைத்த பிறகு அரிசியைக் கழுவிக் களைந்து கற்கள் போக அரித்து ஒவ்வொரு பிடி அரிசியாக எடுத்து உலையில் போடவேண்டும். அதாவது:-

உலையில் அரிசியிடும்மந்திரம்

ஓம் தாயான செல்வம்
அம்ருத மயமாக
வளர்ந்தேறி யிருக்க
ஸ்ரீ ராஜ ராஜேச்வரீ
லலிதா பரமேச்வரீ
பரா பட்டாரிகா
அருள்செய்ய வேண்டும்
அன்ன பூர்ணேச்வரீ

என்று எட்டுக்கை போடும்வரை இந்த எட்டு மந்திரத்தையும்சொல்லி அதன் பிறகு, அன்ன பூர்ணேச்வரீ; அன்ன பூர்ணேச்வரீ' என்று ஒவ்வொரு முறையும் சொல்லிக் கொண்டே எல்லா அரிசியையும் போட்டு உலையை மூடி விடவேண்டும். வெந்த பிறகு அன்னத்தை வடித்து நிமிர்த்தியவுடன் அல்லது பொங்கி இறக்கி வைத்தவுடன் பானையில் அவரவர் வழக்கப்படி விபூதி பூசி குங்குமப் பொட்டிட்டு அன்னத்தைமந்திரம் சொல்லிக் கும்பிட வேண்டும்.

சமையல் செய்த அன்னத்தைக் கும்பிடும் மந்திரம்:-

அன்னமே வடிவமாகி
அன்னத்துள் இரசமாகி
அன்ன பூரணியா யெல்லா
உயிரினும் ஆன்மாவாகி
நின்னையே நினைவோர்க் கெல்லாம்
நின்மல ஞானம் நல்கும்
அன்னையே லலிதா தேவீ
அடியிணை போற்றிபோற்றி.

இவ்வாறு சொல்லி அன்னத்தைக் கும்பிட்ட பிறகு அதில் கொஞ்சம் அன்னத்தை எடுத்து நெய் இருந்தால் அதனோடு கொஞ்சம் கலந்து அடுப்புத் தணலில் 'ஓம் ஸர்வ தேவ முகாய

அக்நயேஸ்வாஹா, ஓம் ஸர்வதேவதாஸ்வ ரூபாயை லலிதாம்பிகாயை நம, ஸ்வாகா' என்று சொல்லிக் கொண்டு இரண்டுமுறை போடவேண்டும். இவ்வாறு மந்திரத்தோடு சேர்த்த அன்னத்தைச் சாப்பிடுவதனால் அன்னதோஷங்கள் அனைத்தும் அகன்று விடுகின்றன. அமிருதம் உண்டதுபோன்று உடலுக்கு நலத்தைத் தருகின்றது. தெய்வீக சக்தியை உண்டு பண்ணுகின்றது. ஆதலால் இவ்வாறே செய்து வருவாயாக! என்று சொல்லிச் சாந்தாவை வீட்டிற்குப் போக உத்தரவு கொடுத்தார். அன்று முதல் சாந்தாவும் யோகினியார் சொற்படியே மந்திரத்துடன் சமையல் செய்து பழகிவந்தாள். அப்படியே அவளுடைய தாயார் தங்கைகள் ஆகிய எல்லோரையும் மந்திரத்தோடு சமையல் செய்யும்படி செய்தாள்.

சாந்தாவின் வீட்டில் யார் சமையல் செய்தபோதிலும் அவர்கள் சமையல் மந்திரத்தை மிகவும் பக்தியோடும், ஒரே மனத்தோடும், நம்பிக்கையோடும் சொல்வார்கள். அவர்கள் வீட்டு அன்னம் அமிர்தத் தன்மை வாய்ந்ததாக இருந்தது. அவ்வித அன்னத்தை உண்டு வந்ததால் அவர்கள் நோய்களின்றி, ஆரோக்கியமாகவும் திடகாத்திரமுடையவர்களாகவும் வாழ்ந்து வந்தார்கள். யோகினியாருக்கும் சாந்தாவின் வீட்டு அன்னம் புசிப்பதில் அதிக பிரியமாக இருந்ததனால் அடிக்கடி அவர்கள் வீட்டு அன்னத்தினையே உண்டு வந்தார்கள்.


## ஸ்ரீ லங்கா

**அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்படுவது**

மலர் 13. இதழ் 1. 1960 டிசெம்பர் மாத இதழ் கிடைக்கப் பெற்றோம். 15 சத விலையுடன் உயர்ந்த கடுதாசியில் உயர்தரமான கட்டுரைகளைக் கொண்டு வெளிவந்துள்ளது. திருக்கேதீச்சரம், கதிர்காம யாத்திரை, நாவலர் எழுந்தார், சேர். பொன்னம்பலம் இராமநாதன் என்னும் அரிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் அவசியம் வாசிக்க வேண்டியதாகும்.

விபரம் தேவையானோர்:- ஆசிரியர், ஸ்ரீலங்கா, அரசாங்கத் தகவற் பகுதி, செனேட் கட்டடம், த. பெ. எண் 1416, கொழும்பு என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்க.




# உபநிஷத் உண்மைகள் 7

– வித்துவான் மு. கந்தையா –

உலகிலே மனிதரிற் பெரும்பாலாருக்குக் கைவராத காரியங்கள் இரண்டு. ஒன்று ஆன்மவிசாரம்; மற்றது பரலோக உண்மை. இவ்விரண்டும் அவர்களுக்குக் கைவராமைக்குக் காரணம் மூன்று. ஒன்று விவேகமின்மை, மற்றையது கவனமின்மை, ஏனையது செல்வமோகம். இந்த மூன்றும் அவித்தையின் அம்சங்கள், இவற்றின் ஆட்சிக் குட்பட்டவர் மீண்டும் மீண்டும் யமன் கைக்குப் போய்ப் போய்த் திரும்புவார்கள். அதாவது' செத்துச் செத்துப் பிறந்து கொண்டேயிருப்பார்கள். இவர்கள்,

"பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே"

— திருநாவுக்கரசு சுவாமிகள்.

பிறப்பதும் இறப்பதும் மாத்திரம் இவர் வாழ்வின் முடிந்த பயனாய் விடுகின்றது.

"அன்னை யெத்தனை யெத்தனை அன்னையோ
அப்ப னெத்தனை யெத்தனை அப்பனோ" — இந்த விசாரம் இவர்களுக்கு ஏது?

தன்னையும் உலகையும் பொறுத்தவரையில் நித்தியமெது அநித்தியமெது என்று உணரும் அறிவு விசேடமே விவேகம் எனப்படுவது. இந்த நித்தியா நித்திய விவேகத்தைப் பெற்று, நித்தியத்தைப் பெற்று, நித்தியத்தைப் பற்றுவதிலே மேற்கொள்ளும் அயரா உழைப்பு கவனம் எனப்படும். நித்தியத்தை யுணரும் விவேகம் போலவே அதனைப் பற்றுங் கவனமும் இன்றியமையாததாகும். இனி, அநித்தியம் எனப்படுபவற்றுளெல்லாம் அநித்தியமானது செல்வம். இதுவே பொருளென்று கொள்ளும் மயக்கமே செல்வமோகம் எனற்பாலது. செல்வம் — [நிற்கமாட்டோம்] போவோம், லக்ஷ்மீ சஞ்சலா [நிலையற்றவள்]

என அது பெயரளவிற் கூடத் தன் அநித்தியத் தன்மை ஒன்றையே உணர்த்தி நிற்கின்றது. நித்தியா நித்திய விவேகத்துக்கும் சொல்லாலும் செயலாலும் அநித்தியமாகிய செல்வத்துக்கும் எங்கே பொருத்த மிருக்க முடியும்? இச் செல்வ மோகமின்மையே வேண்டற்பாலது.

குறித்த மூன்றுங் கைவரப் பெறாதவனுக்கு ஆன்ம ஞானமும் பரலோக உண்மையும் அந்நியமாதலினாலே அவன் 'கண்டதே காட்சி கொண்டதே கோல'மாய் அமைந்து விடுகின்றான். தனக்குப் புலனாகும் இவ்வுலகம் ஒன்றே அவன் உலகம். தவளைக்குத் தான் வசிக்குங் கிணறே முழு உலகமும். அவனுக்கும் தன்புலனுக் கெட்டிய அச்சிறு உலகமே முழு உலகமும். இந்நிலையில் பரலோகம் என்பது வெறுங்கனவு; அப்படி யொன்று இல்லவேயில்லை என்பது அவன் முடிவு. இவனுக்கு யமன் வசமின்றி வேறு வசமில்லை. இந்த உண்மையை யமன் நசிகேதஸுக்கு உணர்த்துஞ் சுலோகம்:-

ந சாம்பராய; பிரதிபாதி பாலம்
பிரமாத்யந்தம் வித்தமோஹேன மூடம்!
அயம் லோகோ ந பர இதி மானீ
புன; புனர் வஷமாபாத்யதே மே!!

[பரலோக உண்மையும். ஆத்ம ஞானமும் அதிற் கவனமில்லாதவனுக்கும் பொருளில் மோகங் கொண்டுள்ளவனுக்கும் அவிவேகிக்கும் விளங்காது. இதுவே, லோகம், பரலோகம் என ஒன்று கிடையாது என எண்ணும் அவன் மீண்டும் மீண்டும் [யமனாகிய] என்வசத்தில் அகப்படுகிறான்.]

இங்ஙனம், அவித்தையாளனாகிய அஞ்ஞானி ஒரு செல்லாக் காசு. செல்லாக் காசு யார் கைக்குப் போனாலும் திரும்பவுங் கொடுத்தவன் கைக்கே போய்ச் சேரும். அந்த அஞ்ஞானியும் பிறவிகளிலே வந்து வந்து மீண்டும் யமனிடமே சென்று சேர்கின்றான்.



'யான் ஒரு செல்லாக் காசு' என்று உணரும் விவேகம் ஒரு சாதாரண மனிதனுக்கு வந்து விட்டாலே அவன் பெரும் பாக்கியவானாவான். மற்றைய விவேகம் அனைத்திற்கும் அதுவே வழிகோலும். இந்த ஒரு விவேகந் தோன்றுதற்குக் கூட அருகதை யற்றதாய்ப் போய்க் கிடக்கின்றது நம் தலை. இத்தலைக்குள்ளே நாளிலும் பொழுதிலும் எத்தனையாயிரம் பிரச்சனைகளைப் போட்டுப் பிசைந்து கொண்டிருக்கின்றோம். ஒன்றும் புலப்பட்ட பாடில்லை. தலை புழுத்தது தான் மிச்சம். வாணாள் வீணானதே கண்ட பலன்.

'பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன்' என்ற மணிவாசகமும் நமக்கேதான் பொருத்தமாகின்றது.

தினசரி ஒரு சிறு பொழுதாயினும் ஆறியமர்ந்திருந்து ஆண்டவன் பெருமையையும் தன் சிறுமையையும் உற்று உற்று நோக்க முடியாதவனுக்கு — வீட்டிலே, நாட்டிலே தனக்குள்ள செல்மதியைப் பற்றிப் பெருமையுற்று அப்பெருமையிலே சொக்கிப் போகும் மனிதனுக்கு — தான் ஒரு செல்லாக் காசு என்ற விவேகம் எங்கே வரப் போகின்றது.

— தொடரும்.

''ஒரு மனைவி கணவனிடத்தில் வைத்திருக்கும் அன்புக்கு அவளுடைய ஆத்மானந்தமே காரணம். அப்படியே தான் மனைவியிடத்தில் கணவனுக்கு உள்ள அன்பும், மகனுக்குத் தந்தையிடத்துள்ள அன்பும்.

— யாக்ஞவல்கிய மகரிஷி

ரிஷிகளுடைய உபதேசங்களால் உள்ளத் தூய்மை, சமூகநலம், கடவுள் பக்தி இவை எப்பொழுதும் நம்முடைய சுயநலம் நிறைந்த இதயங்களில் விளங்கட்டும்; நம்முடைய தவறுகள் நிறைந்த அடிகளுக்கு வழிகாட்டியாக இருக்கட்டும்,

— இராமசாமிசாஸ்திரி

# பக்தித் தாயின் 64 அவயவங்கள்

— சுவாமி அபேதானந்தா —

பவ நோயிலிருந்து விடுதலை அடைவதற்குப் பெரியோர்கள் அநேக உபாயங்களை நமக்குக் காட்டியுள்ளார்கள். எண்ணிறந்த மார்க்கங்களை நாம் சாஸ்திரங்களில் காணலாம். ஆனால் பகவானுக்கு மிகவும் சொந்தமான பக்தி எனும் சாதனம் சாதனங்களுக் கெல்லாம் மகுடமாகத் திகழ்கிறது. பக்தி மார்க்கத்தைப் பின்பற்றும் சாதகர்கள் பக்தித்தாயின் ஒவ்வொரு உறுப்பையும், பக்தித்தாயின் கிருபையால் அமைக்கப்படும் ஒவ்வொரு படியையும் அவசியம் திறந்து கொள்ள வேண்டும். பக்தித்தாயின் அறுபத்து நான்கு உறுப்புகள் பின்வருமாறு:-

1 குரு மலரடிகளில் சரணம் புகுவது.

2 மந்திர தீக்ஷை பெற்று, அது சம்பந்தமான உபதேசங்களைக் கிரகிப்பது.

3 பூரண நம்பிக்கையுடன் குருநாதருக்குப் பாத சேவை செய்வது.

4 பக்திமான்கள் புரியும் நற்செயல்களைப் பின்பற்றுவது.

5 பக்தி சம்பந்தமான கேள்விகளை எழுப்புவது.

6 நம் உயிரினும் பிரியமான பகவானுக்காக உலக இன்பங்களைத் தியாகம் செய்வது.

7 பிருந்தாவனம் போன்ற புனிதமான இடங்களில் வாசம் செய்வது.

8 மிகவும் அவசியமுள்ள பொருட்களை மட்டும் ஏற்றுக் கொள்வது.

9 ஏகாதசி முதலிய புனித நாட்களில் உண்ணாவிரதம் அனுஷ்டிப்பது.

10 அரச மரத்தை வலம் வந்து நமஸ்கரிப்பது.

11 பக்திமார்க்கத்திற்கு முரண்பாடானவர்களுடன் பழகாமல் இருப்பது.



12 தகுதியற்றவர்களிடம் பக்தி தர்மத்தைப் புகலாமல் இருப்பது.

13 பக்தி தர்மத்திற்கு மாறுதலான நூல்களைப் படியாமல் இருப்பது. [அதாவது மறைந்த நாவல், பத்திரிகை முதலியவைகள் கையாளாமல் இருப்பது.]

14 பக்தி தர்மத்திற்கு எதிரான செயல்களில் பங்கெடுக்காமல் இருப்பது.

15 முக்கியமான விஷயங்களில், அதாவது பக்தி உணர்ச்சிக்குத் தகுந்த விஷயங்களில் உலோபம் ஏற்படாமல் தன்னைப் பாதுகாப்பது.

16 துக்கம், சினம் முதலிய விகாரங்களுக்கு அடிமையாகாமல் இருப்பது.

17 தான் உபாஸிக்கும் தேவதையென்றும், இதர தேவதையென்றும் வேற்றுமை பாராட்டி இதர தேவதைகளை இகழாமல் இருப்பது.

18 உயிரினங்களுக்கு எந்த உயிராகிலும் சரி அவைகளுக்கு ஒரு போதும் துன்பத்தைத் தராமல் இருப்பது. பிறர் சினம் கொள்ளும்படி நடந்து கொள்ளாமல் இருப்பது.

19 சேவாபராதம், நாமாபராதம் இவைகள் தன்னைச் சாராமல் பாதுகாப்பது.

20 பகவானையும், பக்தர்களையும் பிறர் இகழ்வதைக் காதில் வாங்காமல் இருப்பது.

21 நமது கொள்கைகளுக்குத் தகுந்தபடி ஏதாகிலும் ஒரு சின்னத்தை நெற்றியில் தரிப்பது. [விபூதி, நாமம், திலகம், ஏதாகிலும்]

22 பகவந் நாமா அட்சரங்களைத் தேகத்தில் அணிவது.

23 பகவானுக்கு அர்ப்பணித்த மாலையை அணிவது.

24 பகவானுடைய விக்ரகத்தின் முன் பிரேமாவேசத்துடன் நர்த்தனம் புரிவது.

25 பகவானுடைய விக்ரகத்தின் முன் தண்ட நமஸ்காரம் செவ்வது.

26 மனக் கண்ணால் பகவானைத் தரிசித்து எழுந்திருப்பது.

27 கோயிலில் பகவானுடைய விக்ரகத்திற்குப் பின் வலம் வருதல்.

28 அர்ச்சாவதாரம் என்று புகழப்படும் பகவானுடைய புனித விக்ரகங்கள் அமைந்துள்ள க்ஷேத்திரங்களுக்குச் செல்வது.

29 அப் புனித ஆலயங்களை வலம் வருவது.

30 பகவானுடைய ஸ்ரீ விக்ரகத்தை முறையாகப் பூஜை செய்வது அல்லது நடைபெறும் பூஜைகளைத் தரிசிப்பது.

31 பகவானுடைய ஸ்ரீ விக்ரகத்திற்குச் சேவை செய்வது. [அதாவது நைவேத்தியத்திற்குள்ள பொருளைக் கொடுப்பது, புஷ்பமாலைகள் கொணர்ந்து அணிவிப்பது, பகவான் குடிகொள்ளும் கோயிலைப் பெருக்கிச் சுத்தம் செய்வது முதலியன.

32 மூர்த்தியின் முன்னிலையில் பக்தியுடன் நாமாவளிகளைப் பாடுவது.

33 பகவானுடைய லீலைகள், குணங்கள், நாமங்கள் முதலியவைகளைப் பாடி மகிழ்வது.

34 உபதேசமாகப் பெற்ற மந்திரத்தை ஜபம் செய்வது.

35 சுயநலத்தை விடுத்துப் பகவானை மனமுருகிப் பிரார்த்தனை செய்வது.

36 பகவானைத் துதிக்கும் தோத்திரங்களைப் பாராயணம் செய்வது.

37 பகவானுக்கு அர்ப்பணித்த பிரசாதத்தை உண்ணுவது

38 பகவானுடைய சரணம்ருதம் பருகுவது.

39 பகவானுக்கு ஆராதனை செய்த தூப தீபங்களின் கந்தத்தை முகர்வது.

40 தூய எண்ணங் கொண்டு பகவந் நாமங்களை மனமாரச் சொல்லி பகவானுடைய ஸ்ரீ விக்ரகத்தை ஸ்பர்சிப்பது அல்லது மனதினுல் கட்டித் தழுவுவது.

41 ஸ்ரீ விக்ரகத்தை அகத்திலும் புறத்திலும் சதா தரிசிப்பது.

42 ஸ்ரீ விக்ரகத்திற்கு நடத்தும் தீபாராதனையைத் தரிசிப்பது.



43 பகவானுடைய நாமம், குணம், லீலை முதலியவைகளை பிறர் சொல்ல, கருத்துடன் கேட்பது.

44 பகவத்கிருபைக்கு நான் பாத்திரமாக மாட்டேனு? என ஏங்கித் தவிப்பது.

45 பகவானை உள்ளத்தில் வைத்து நிரந்தரமாகச் சிந்தனை செய்வது.

46 பகவானுடைய வடிவத்தைக் கண்டு, இதயத்தில் கொண்டு தியானம் செய்வது.

47 நாம் செய்ததாகிய சத் கருமங்களின் பலனை பகவானுக்குத் தாரை வார்ப்பது.

48 பகவானிடம் கொண்ட நம்பிக்கையைப் பெருக்கி திடமாக்கிக் கொள்வது.

49 தன்னையும்' தன் சுற்றத்தாரையும் எல்லாம் பகவானிடம் ஒப்படைப்பது.

50 தனக்கு மிகவும் பிரியமான பொருளைப் பகவானுக்கு நிவேதிப்பது.

51 பகவானைப் பரிபூரணமாகச் சரணடைவது.

52 எல்லாச் செயல்களும் பகவானுக்கென்றே செய்வது.

53 துளசிச்செடிக்கு நீரூற்றி வலம் வந்து தூபதீப நிவேத்தியங்களால் சேவை செய்வது.

54 பக்திச்சுவை மிகுந்த விஷயங்களைப் பற்றி சர்ச்சை செய்வது.

55 பகவான் எங்கும் குடிகொண்டிருக்கிருன் என்ற உண்மையைச் சதா ஞாபகத்தில் வைப்பது.

56 பக்தர்களுக்குப் பணிவிடை செய்வது; அவர்களைக் கேட்காமலேயே அவர்களுடைய தேவைகளை அறிந்து செய்து முடிப்பது.

57 நம்மால் முடிந்த அளவுக்குப் பகவானுக்கு உற்சவங்களைக் கொண்டாடுவது.

58 கார்த்திகை மார்கழி மாதங்களில் விரதத்தைக் கையாண்டு விசேஷ முறையில் பகவானை ஆராதிப்பது.

49 பகவானுடைய ஜயந்தி அதாவது ஜன்மாஷ்டமி முதலிய புனித தினங்களைக் கொண்டாடுவது.

60 பகவானுடைய ஸ்ரீ விக்ரகத்திற்குச் சேவை செய்வதில் மேலும் மேலும் உணர்ச்சியும் உற்சாகமும் பீறிட்டு எழுவது.

61 ஸ்ரீமத் பாகவதமும், கீதையும் முறையாகப் பாராயணம் செய்வது.

62 பக்தர்களுடன் சங்கம் செய்ய சூழ் நிலையை உண்டு பண்ணுவது. [சத்சங்கம் செய்வது.]

63 பக்தர்கள் ஒன்றுகச் சேர்ந்து ஆலயத்தில் அல்லது புனிதமான இடங்களில் பிரேமையுடன் நாம ஸங்கீர்த்தனம் செய்வது.

64 பக்த மண்டலிக்குச் சேவை செய்வது; ஆராதிப்பது; எல்லாம் அவன் மயமாகத் தரிசிப்பது.

இந்தப் பக்தி சாதனை முறையாக நாம் அநுசரிப்போமானல் அதி சுலபமாகப் பகவானுடைய கிருபைக்கு நாம் பாத்திரமாகி விடுவோம் என்பது திண்ணம்.

# ரிஷிகேசம் தெய்வீக வாழ்க்கைச் சங்கம்

## வெள்ளிவிழா நாமலிகித ஜெபம்

### ஜனவரி மாதம் முடிய உள்ள கணக்குவிபரம்

| | |
|---|---|
| சென்ற மாதக் கணக்கு | 15616284 |
| ஊவாக் கெட்டவெல்ல காலிஎல | 4400 |
| களுவாஞ்சிக்குடி | 2250 |
| சங்கானை | 8800 |
| பண்டாரவளை | 1500 |
| பள்ளக்கலை | 57636 |
| உடுவில் | 3410 |
| சண்டிலிப்பாய் | 15840 |
| தபோவனம் கண்டி | 4800 |
| கட்டுவன் | 26006 |
| கொழும்பு | 13810 |
| காங்கேசன் துறை | 22428 |
| பதுளை | 2340 |
| வெள்ளவத்தை | 56400 |
| உடுப்பிட்டி | 107000 |
| கொக்குவில் | 4710 |
| மத்துகமப்பட்டினம் | 2000 |
| மதுகெதறத் தோட்டம் | 4400 |
| சென் ஜோட்ஜ், தோட்டம் | 4000 |
| கீக்கிஞகந்த, தோட்டம் | 3920 |
| மத்துகமத் ,, | 4398 |
| இலப்பந்துறப் பட்டினம் | 2000 |
| பாந்திய தோட்டம் | 2160 |
| கல்வயல் | 4464 |
| ஊரெழு | 6804 |
| கோப்பாய் | 8400 |
| தெல்லிப்பளை | 10428 |
| கற்றன் | 6800 |
| திமிலைத்தீவு | 8000 |
| பருத்தித்துறை | 12672 |
| மாணிக்கவல்லி, றத்தோட்டை | 28000 |
| இயக்கச்சி | 7680 |
| மூதூர் கொட்டியாபுரம் | 24280 |
| லேன்ஸ்டவுன், இரத்தினபுரி | 101358 |
| நல்லூர் | 15840 |
| சாம்பல்தீவு | 92000 |
| அல்லிதோட்டம் கினிகத்தனை | 71561 |
| நாவலப்பிட்டி | 233197 |
| திரிகோணமலை | 208621 |
| பென்றுேஸ் கலபொட | 10000 |
| லோவற்கெற்றியா கல்லஸ் | 6720 |
| மொத்தம் | 16817317 |

Registered at the G. P. O. as a News Paper M. L. 59-300


## சர்க்கரை கொல்லி சூரணம்

(DIABETES) என்னும் நீரழிவு. மதுமேகம் சர்க்கரை வியாதிக்கு மிகச் சிறந்த சூரணம்.

நீரில்வருகிற சர்க்கரையைப் போக்கி புளிப்புச்சத்தை குறைத்து கொழுப்பு ரஸனேகள் போவதைத் தடுத்து சப்ததாதுக்களின் தித்திப்பைக் குறைக்கும் அற்புதஒளடதம் யாவும் மூலிகையினுல் சித்தர்களின் அனுபவ முறைப்படி தயாரிக்கப்பட்டது.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 6 ரூ 75 ச.

இலங்கையில் கிடைக்குமிடம்

**ஆத்மஜோதி நிலையம் - நாவலப்பிட்டி.**

இந்தியாவில் கிடைக்கும் இடம்:-

**சம்பு இன்டஸ்ரீஸ் சேலம் 2 (S. I.)**

மலாயாவில் கிடைக்குமிடம்:-

**மு. கணபதி அன் கம்பெனி**

**66, பெல்பீல்ட் ஸ்ரீட் ஈப்போ.**


## சந்தா நேயர்களுக்கு

ஜோதி எடுக்கும் சந்தா நேயர்கள் அனைவரும் தமது சந்தாப் பணங்களை அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேம். பணம் அனுப்பும்போதும் விலாச மாற்றம் செய்யும்போதும் சந்தா இலக்கத்தைத் தவறுது குறிப்பிட வேண்டுகின்றேம்.

இந்தியாவில் உள்ள அன்பர்கள் வழக்கம் போல

R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ், சேலம் 2.

என்ற விலாசத்திற்கு அனுப்பிவைப்பதோடு இவ்விடமும் அறியத்தருக.

**ஆத்மஜோதி நிலையம் - நாவலப்பிட்டி.**

(சிலோன்)

Printed & Publihed by Mr. Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya
at ATHMAJOTHI PRESS, NAWALAPITIYA (Ceylon) 12-2-61